C 22777 (Pages : 2)

# Ph.D. ENTRANCE EXAMINATION, APRIL 2022

## TAMIL

Time : Two Hours Maximum : 100 Marks

I. அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக :

1 அகநானூற்றின் வேறு பெயர் யாது ?

2 வஞ்சிநெடும்பாட்டு என்று அழைக்கப்படும் நூல் எது ?

3 "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற முழக்கத்தை மையமாக வைத்துப் பாடப்பெற்ற நூல் ?

4 பத்தாம் திருமுறை எது ?

5 ஆண்டாளை வளர்த்த ஆழ்வார் யார் ?

6 சின்னூல் என்று அழைக்கப்படும் நூல் ?

7 தமிழ்க்காதல் என்னும் நூலை இயற்றியவர் ?

8 'குட்டித் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலைக் குறிப்பிடுக.

9 மாற்றிலக்கணக் கோட்பாட்டை உருவாக்கியவர் ?

10 பாண்டிச்சி என்னும் நாவலை எழுதியவர் ?

($10 \times 1 = 10$ marks)

II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடை தருக :

11 உவமம் என்றால் என்ன ?

12 அறத்தோடு நிற்றல் என்பது யாது ? விளக்குக.

13 கொண்டுகூட்டு என்றால் என்ன ? சான்று தருக.

14 ஆற்றுப்படை என்றால் என்ன ? விளக்குக.

15 கேள்விச் செல்வத்தின் சிறப்பை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் ?

16 உலா இலக்கியம் பற்றி எழுதுக.

Turn over

17 திராவிட மொழிகளில் உயர்திணைப் பெண்பால் ஒருமை விகுதிகளைக் குறிப்பிடுக.

18 இலக்கியங்களை ஒப்பாய்வு செய்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

19 முடிபுமுறைத் திறனாய்வு விளக்குக.

20 பள்ளிச் சந்தம் என்றால் என்ன ?

21 தேம்பாவணியின் அமைப்பை விளக்கி எழுதுக.

22 நாட்டுப்புற இலக்கியத்தின் ஐந்து முக்கியப் பண்புகள் எவை ?

(10 × 3 = 30 marks)

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக :

23 தமிழரின் போர் திறமைகளைப் புறநானூறு வழி விளக்குக.

24 திருக்குறள் வழி அறியலாகும் குடும்ப வாழ்க்கையை எடுத்துரைக்க.

25 திருக்குற்றாலக் குறவஞ்சி உணர்த்தும் மலைவளத்தைத் தொகுத்துரைக்க.

26 தமிழக வரலாற்றை அறிய உதவும் அடிப்படைச் சான்றுகள் குறித்து விவரிக்க.

27 இஸ்லாமியரின் தமிழ்த் தொண்டினைக் குறிப்பிடுக.

28 ஆங்கிலக் கல்வியால் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை ?

29 இந்திய தேசிய விடுதலையில் இதழ்களில் பங்கு குறித்து எழுதுக.

30 மொழிபெயர்க்கும் போது ஏற்படும் சிக்கல்கள் யாவை ?

(3 × 10 = 30 marks)

IV. எவையேனும் இரண்டனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக :

31 கேரளத்தில் கண்ணகி வழிபாடும் சிலப்பதிகாரமும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

32 அகராதிப்பதிவின் பொது அமைப்பு குறித்து விளக்குக.

33 விடுதலைப்போரும் தமிழகமும் என்ற பொருளில் கட்டுரை வரைக.

34 ஆய்வாளருக்குரியத் தகுதிகளை விவரித்து எழுதுக.

(2 × 15 = 30 marks)